முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1011

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.07.2022, புதன்கிழமை

1. அருள்பலம் கொண்ட அரங்கனே
அறமாக வாழும் தேசிகனே
பொருள்வளம் கூட்டி உலகோரை
புண்ணியவழிக்கு வழிகாட்டும் ஞானதேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 22 நாள், 06.07.2022 புதன்கிழமை)
ஆசிதந்து அரங்கன் உன்னுள் யான்
ஆற்றல்பட வழிநடத்தி வர
3. வருகின்ற அரங்கன் சன்மார்க்கமே
வையகத்தை நல்மார்க்கம்வழி வழிநடத்திக் காத்தருளும்
தருகின்ற அரங்கன் தர்மமே
தரணியோர்க்கு பசிபிணி விரட்டி காத்தருளும்
4. அருளாக அரங்கன் தரும் உபதேசமே
அறமாக உலகமெல்லாம் வலம் வந்து
வருமுலகில் உலகோரை ஞானவான்கள் ஆக்கி
வையகத்தை பாதுகாப்புமிக்க பூமியாக மாற்றும்
5. மாற்றத்தை தர வந்த மகா ஞானி
மண்ணுலகை காக்க வந்த மாதவசி
ஆற்றல்அறிந்து உலக மக்களெல்லாம்
அரங்கன்பால் முழுமையான சரணாகதி கொண்டால்
6. கொண்டிட உலகம் மாறும்
கொண்டதொரு இடர்களெல்லாம்
இனி தொடராவண்ணம் விலகி
உண்டாகும் உலகமெங்கும் பாதுகாப்பு
7. உயிர்கொலையில்லா ஞானவாழ்வாக மக்கள்
தயவாக சன்மார்க்க வழியை பின்பற்ற
தரணியில் தண்டாயுதன் என்
ஞான ஆட்சி சடுதி கனியும்
8. கனியவே துறையூர் வாழ் ஞானி
கருணைமிக்க ஓங்காரக்குடிலில்
பெருமைபட யானே அருளுகின்றேன்
பிசகின்றி உலகோர் அனுகிவர

9. வருகவே உலகம் மாற்றம் பெறும்
வளர்ச்சிமிக்க ஞான பூமியாகி
பலமான ஞானவான்கள் ஆட்சிக்காலமாக
பால தண்டாயுதன் என் அருளால் நடந்தேறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–